“மழைநீர் சேமிப்போம்” “பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் “

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 18.10.2022.

**நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 3 -ம் நாள் 20.10.2022-ம் தேதி வியாழக் கிழமை காலை 11.45 மணிக்கு நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஒ.ம்.) பா.ரேணுப்பிரியா,
நகர்மன்ற தலைவர்,
தேனி -அல்லிநகரம் நகராட்சி.

**பொருள் 01:-**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24-B மற்றும் 24–H–ன்படி நகராட்சிகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபை ஏற்படுத்திடவும் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, அரசாணை எண்.92 நாள் 24.06.2022, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, அரசாணை எண்.93 நாள் 24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.358, நாள் 24.06.2022–இல் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு வார்டு குழு மற்றும் பகுதி சபை குழு நிர்ணயம் செய்வது தொடர்பாக வரப்பெற்றுள்ள அரசாணை மற்றும் அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) அரசு உத்தரவின்படி வார்டு குழு மற்றும் பகுதி சபை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1084/2021/பி4

**தீர்மான எண் : 230**
**தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் 02:-**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண் : 92 நாள் : 24-06-2022, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண் : 93 நாள் : 24-06-2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண் : 358 நாள் : 24-06-2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்: 24470/2022/MA2 நாள்: 08-08-2022 கடிதத்தில் நகராட்சி பகுதியில் வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திடவும் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசு உத்தரவின்படி தேனி - அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திட பிரிக்கப்பட்டுள்ள தெருக்களின் பட்டியல் மற்றும் எல்லைகளின் விவரப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) அரசு உத்தரவின்படி தயார் செய்யப்பட்டுள்ள வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திட பிரிக்கப்பட்டுள்ள தெருக்களின் பட்டியல் மற்றும் எல்லைகளின் விவரப் பட்டியலுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்கண்ட பட்டியலினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 3029 / 2022 / பி4

**தீர்மான எண் : 231**
**தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒ.ம்.) பா.ரேணுப்பிரியா,
நகர்மன்ற தலைவர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
தேனி -அல்லிநகரம் நகராட்சி